# பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கடவுளில்லை!

## மதவாதிகளின் கருத்து மீது விழுந்துள்ள இன்னொரு பேரிடி



குரங்கில் இருந்துதான் கூர்ப்படைந்து பரிணாம வளர்ச்சியில் மனிதன் தோன்றியதாக பிரித்தானியாவின் ஆராய்ச்சியாளர் சாள்ஸ் டார்வினின் சொன்னபோது மதவாதிகள் கொதித்தெழுந்தார்கள். மனிதனைக் கடவுள்தான் படைத்தார். ஆதாம் – ஏவாளின் வழி வந்தவர்கள் இந்த மனிதர்கள் என்ற மதவாதிகளின் நம்பிக்கைக்கு இது ஆப்பு வைப்பதாகவும், கடவுளின் படைப்புக் கொள்கையை கேலி செய்வதாகவும் சாள்ஸ் டார்வினின் ஆராய்ச்சி முடிவுகள் இருப்பதாக மதவாதிகள் போர்க்கொடி தூக்கினர். இதனால், அவரை கொல்வதற்கு கூட மதவாதிகள் துணிந்தார்கள். மரண தண்டனையை நிறைவேற்றுமாறு ஆட்சியில் இருந்த அரசை அவர்கள் வலியுறுத்தினார்கள். இது நடந்தது 19ம் நூற்றாண்டின் இறுதியில். காலப்போக்கில் எது உண்மை என்ன என்பதை உலக மக்களில் பலர் உணர்ந்துகொண்டார்கள்.

இப்போது கடவுளின் படைப்பிற்கு எதிரான இன்னொரு கருத்தும் அதே பிரித்தானியாவில் இருந்துதான் வந்திருக்கின்றது. இந்தப் பேரண்டத்தை கடவுள்தான் படைத்தார் என்று மதவாதிகள் இன்றைய 21ம் நூற்றாண்டிலும் சொல்லிக்கொண்டிருக்க, இல்லை இயற்பியல் கோட்பாடுகளின் விளைவுகளே இந்த பூமி முதல் அனைத்துக் கோள்களும் தோன்றுவதற்கு காரணம் என ஆய்வு செய்து அடித்துக் கூறியுள்ளார் ஸ்ரீபன் ஹக்கிங் (Stephen Hawking) என்ற புகழ்பெற்ற இயற்பியல் பேராசிரியர். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு சுயமாக நடமாடமுடியாமல் இருக்கும் இவரது ஆராய்ச்சிகள் பலரையும் வியக்கவைப்பவை. இப்போது அவர் கூறியுள்ள கருத்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தினாலும், அவரைக் கொல்லுங்கள் என்று வெறித்தனம் கொண்ட அளவிற்கு மூடத்தனங்கள் இருக்கவில்லை. அதனால் அவரது கருத்துக்கள் இன்று பலராலும் உள்வாங்கப்பட்டு ஆராயப்படுகின்றது.




Muscular dystrophy எனும் உடலியல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவரான ஹக்கிங், விண்வெளியியல் ஆய்வுக்கு ஆற்றிய சேவை மிகப் பெரியது. பிளாக் ஹோல்ஸ் குறித்த இவரது ஆய்வு மிகப் பெரியது. இவர் 1988ல் எழுதிய `த பிரீப் ஹ்ஸ்ரி ஓப் ரைம் (The Brief History of Time)' என்ற ஆய்வு நூல் மிகப் பிரபலமானது. பிரபஞ்சம் உருவானதற்குக் காரணமான பிங் பாங் (Big Bang) குறித்த கருத்தையும் மற்றும் அதற்கு முந்தைய காலகட்டத்தையும் இதில் அவர் விளக்கியுள்ளார். பிரித்தானிய சண்டே ரைம்ஸ் இதழின் சிறந்த புத்தக வரிசையில் தொடர்ந்து 237 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தது இந்தப் புத்தகம். தற்போது ஹக்கிங் புதிய தகவலை வெளியிட்டுள்ளார். அது இந்த பிரபஞ்சத்தை கடவுள் உருவாக்கவில்லை. மாறாக, இயற்பியலின் விதிகளே பிரபஞ்சம் உருவாகக் காரணம் என்று கூறியுள்ளார்.

புவி ஈர்ப்பு தத்துவத்தை சர் ஐசக் நியூட்டன் வெளியிட்டார். அதுதான் அண்டவெளியின் ஆதாரம். ஈர்ப்பு சக்திதான் உலகை தாங்கிப் பிடிக்கிறது. அதன் தொடர்ச்சியில்தான் உலகம் உருவானது. புவியீர்ப்பு விதியின்படிதான் உலகம் நிலைத்திருக்கிறது. அதே விதிப்படிதான் தன்னைத்தானே அது படைத்துக் கொண்டிருக்க முடியும். அறிவியல் ரீதியாக உலகைப் பார்ப்பவர்களுக்கு, அறிவியலை புரிந்து கொண்டவர்களுக்கு அதை உருவாக்கியதில் இறைவனின் பங்கு இருப்பதாக நம்ப வேண்டிய அவசியம் இருந்ததில்லை, இருப்பதில்லை என்று கூறும் ஹக்கிங் இயற்பியலின் தவிர்க்க முடியாத விதிகளின் விளைவுகளால்தான் இந்தப் பிரபஞ்சம் உருவானதாக வெளிவரவுள்ள 'தி கிராண்ட் டிசைன் (The Grand Design)' என்ற நூலில் எழுதியுள்ளார்.

இந்த நூலில் உள்ள விடயங்கள் குறித்து சண்டே ரைம்ஸ் இதழுக்கு ஹக்கிங் கூறுகையில், இந்தப் பிரபஞ்சம் உருவாவதற்கு முன்பு அவ்வளவு பெரிய பிரமாண்டமான வெற்றிடம் இருந்தது. எனவே யாரும் வந்து பூமியை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுவாகவே தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளது. இது முற்றிலும் இயற்பியல் சார்ந்ததே. சுருக்கமாக சொன்னால் இந்தப் பிரபஞ்சம், சுயம்புவாக உருவானது. இதை உருவாக்க கடவுளுக்கு அவசியம் இல்லை.




நமது பிரபஞ்சத்தின் அன்றைய நிலை, இன்றைய நிலை, நாம் இந்த பிரபஞ்சத்தில் வாழ முடிவது என அனைத்துக்குமே ஏதாவது ஒரு காரணம் உள்ளது. எதுவுமே மர்மம் இல்லை. எல்லாமே அறிவியல் சார்ந்தது. பிரபஞ்சம் தானாக உருவாகவில்லை, அதை உருவாக்கியவர் கடவுள்தான். கடவுளின் சக்திதான் பிரபஞ்சத்தை உருவாக்கியது என்பது தவறு, அது சாத்தியமில்லை. கடவுள் வந்து தொட்டுக் கொடுத்து `ஏ பிரபஞ்சமே உருவாகு' என்று கூறினார் என்று சொல்வது அபத்தமானது என்று கூறியுள்ளார் ஹக்கிங்.

அதேசமயம், ஹக்கிங் எழுதிய `த பிரீப் ஹ்ஸ்ரி ஓப் ரைம்' நூலில், பூமியின் உருவாக்கலில் கடவுளுக்கும் பங்கு இருக்கலாம் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. அதில், பிரபஞ்சத்தின் முழுமையான வரலாற்றை நாம் பார்க்கும்போது, அது முற்றிலும் மனிதகுலத்தின் வெற்றியாக கூறிக்கொள்ள முடியும். அதில் கடவுளுக்கும் ஒரு இடம் இருக்கலாம் என்று கூறியிருந்தார் ஹக்கிங். ஆனால் தற்போது முற்றிலும் இது இயற்பியல் சார்ந்த நிகழ்வு என்று அடித்துக் கூறியுள்ளார் ஹக்கிங்.

தனது புதிய நூலில் அவர் கூறுகையில், பிக் பாங் காரணமாக சூரிய குடும்பமும், கோள்களும் உருவாகின. பூமியும் உருவானது. இதற்குக் காரணம், இயற்பியலின் விதிகளால் ஏற்பட்ட விளைவுகளே. இங்கு கடவுளுக்கு எங்குமே இடமில்லை. முற்றிலும் அறிவியல் சார்ந்த நிகழ்வு இது. என் முன் இரண்டு கேள்விகளை வைக்கிறேன்.

**முதற்கேள்வி: நம்மால் புரிந்து கொள்ள முடியாத காரணங்களுக்காக கடவுள் இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கினாரா என்பது.**

**2வது கேள்வி: அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரபஞ்சம் உருவானதா என்பது.**

இதில் நான் 2வது கேள்வியையே ஆதரிக்கிறேன். நீங்கள் விரும்பினால் அறிவியலின் கோட்பாடுகளை 'கடவுள்' என்று கூறிக் கொள்ளலாம். அதேசமயம் இதைத் தவிர வேறு எந்தக் கடவுளும் பிரபஞ்சத்துக்கு உரிமை கொண்டாட முடியாது என்பது எனது கருத்து என்கிறார் ஹக்கிங்.

இருப்பினும் பல விடயங்கள் இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. குறிப்பாக பிளாக் ஹோல்கள். இந்த `இருண்ட சக்தி' பிரபஞ்சம் உருவானபோது ஏற்பட்டதா அல்லது பிரபஞ்சம் உருவானபோது அழிந்து போனதின் மிச்சமா என்பது இதுவரை விளங்கவில்லை. தற்போதைக்கு பிரபஞ்சத்தின் வரலாறு குறித்து உலக அளவில் விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ள ஒரே முடிவு பிக் பாங் தியரி மட்டுமே. மிகப் பெரிய வெடிப்புப் பிரளயத்தைத் தொடர்ந்து இந்த பிரபஞ்சம் உருவானதாக இந்த பிக் பாங் தியரி கூறுகிறது. 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பேரண்ட வெடிப்பு நடந்ததாக கடந்த ஆண்டு கணித்துக் கூறப்பட்டது.

தற்போது வெளியாகியிருக்கும் ஹக்கிங்கின் நூலும் பிரபஞ்ச வரலாறு குறித்த புதிய பார்வைக்கு வித்திடும் என்கிறார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த இயற்பியலாளர் லியோனாட் லோடினோவுடன் இணைந்து இந்த நூலை எழுதியுள்ளார் ஹாக்கிங். இது செப்டம்பர் 9ம் திகதி வெளியாகிறது. இந்த இதழ் வெளிவரும் போது அந்த நூலும் வெளிவந்திருக்கலாம்.